# அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் கூறும் திருக்குறள்

***Thirukkural which describes the fourfold Virtue, Wealth, Love and Emancipation***

**ந.தட்சணாமூர்த்தி, அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை**
***N.Dakshinamoorthy, Accounts Officer (Retired), Department of Posts, Pattukkottai***
***ORCID ID: https://orcid.org/0009-0004-5055-1713***

***Abstract:*** *Many people say that the Thirukkural describes only about Virtue, Wealth and Loveand that Valluvar avoided Emancipation since he was against Vedic tradition. This article describes what that were said in Thiruvalluvamalai and compares what said in Thirukkural with those said in Vedic texts like Manu Smritiand analyses the facts.*

***Keywords:*** *Thirukkural, Thiruvalluvamalai, Manu Dharma Sastra, Yoga Sutra, Kaivalya Upanishad.*

***ஆய்வுச்சுருக்கம்:*** *'திருக்குறளானது அறம் , பொருள், இன்பம் பற்றி மட்டுமேகூறுகிறது; வீடு பற்றித் திருக்குறள் கூறவில்லை' என்று பலரும் கூறுவதுண்டு. வள்ளுவர்வைதி கத்துக்கு எதிரானவர் என்பதால் வீடு பேற்றைப்புறக்கணித்து விட்டார் என்றும் கூறுவர். இதைப் பற்றி திருவள்ளுவமாலை கூறு பவற்றை விளக்கியும் திருக்குறளின் துறவறவியலுடன் மனுதருமநூல் முதலியவைதிக நூல்கள் கூறு பவற்றை ஒப்பிட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

***திறவுச்சொற்கள்:*** *திருக்குறள், திருவள்ளுவமாலை, மனுதருமசாத்திரம், யோகசூத்திரம், கைவல்யஉபநிடதம்.*

***முன்னுரை:***

*அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் மனிதருக்கு உறுதிப் பொருட்கள் என்னும் கருத்தில் 'புருஷார்த்தம்' என்று வட மொழியில் கூறப்படும். இவற்றுள், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் வட மொழியில் 'திரிவர்க்கம்' என்பர். இந்த இரண்டு சொற்களையும் வட மொழி நூல்களில் மிகுதியாகக் காணலாம். தமிழிலும் இக்கருத்துகள் உண்டு. திருக்குறளானது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பிரிவுகள் கொண்டது. எனவே அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்பதை விட்டு விட்டு மற்ற மூன்றையுமேவள்ளுவர் பாடியுள்ளார் என்று பலரும் கூறுவர். சிலர் 'வீடு' என்றவை திகக்கருத்தைவள்ளுவர் ஏற்காமல்விலக்கி விட்டார் என்று கூறுவர். இதனால் அவர்வைதிகத்துக்கு எதிரானவர் என்றும் கூறுவர். இவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

***திருவள்ளுவமாலைகூறுவன:***

*திருவள்ளுவரைப் புகழ்ந்து பாடியபாடல்கள் கொண்ட நூல் திருவள்ளுவமாலை. இந்நூலைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இதில் உள்ள பாடல்கள் ஆழ்ந்த கருத்துச் செறிவுடையவை என்பதைஎவரும் ஏற்பர். மிக நீண்ட காலமாக புலவர்களிடையே செல்வாக்கு பெற்றது இது என்பது கருதத்தக்கது.*

*"அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்*
*திறம் தெரிந்து செப்பிய தேவை – மறந்தேயும்*
*வள்ளுவன் என்பான் ஓர் பேதை அவன் வாய்ச்சொல்*
*கொள்ளார் அறிவுடையார்" (திரு.மா. 8)*

*என்ற திருவள்ளுவமாலைப் பாடல், 'அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கின் திறம் தெரிந்து கூறிய தேவன்' என்று திருவள்ளுவரைக் குறிப்பிடுகிறது.*

*"இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்*
*செம்மை நெறியின் தெளிவு பெற – மும்மையின்*
*வீடு அவற்றின் நான்கின் விதி வழங்கவள்ளுவனார்*
*பாடினர் இன்குறள் வெண்பா" (திரு.மா. 40)*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

*என்ற பாடல், மூன்று பால்களினால் வீடு முதலிய நான்கையும் வள்ளுவர் இனியகுறள் வெண்பாவில் பாடியுள்ளார் என்று கூறுகிறது.*

*மேலும் பின்வரும்பாடல்களும் வள்ளுவர் அறம், பொருள். இன்பம் வீடு என்ற நான்கையும் பாடியுள்ளார் என்று கூறுகின்றன.*

*“தானேமுழுதுணர்ந்துதண்டமிழின்வெண்குறளால்
ஆனாஅறம்முதலாஅந்நான்கும் – ஏனோர்க்கும்
ஊழின்உரைத்தாற்கும்ஒண்ணீர்முகிலுக்கும்
வாழிஉலகுஎன்ஆற்றும்மற்று” (திரு.மா. 7)*

*“இன்பம்பொருள்அறம்வீடென்னும்இந்நான்கும்
முன்பறியச்சொன்னமுதுமொழிநூல்–மன்பதைகட்கு
உள்ளஅரிதென்றுஅவைவள்ளுவர்உலகம்
கொள்ளமொழிந்தார்குறள்”(திரு.மா. 33)*

*“அறம்முதல்நான்கும்அகலிடத்தோர்எல்லாம்
திறமுறத்தேர்ந்துதெளிய–குறள்வெண்பாப்
பன்னியவள்ளுவனார்பால்முறைநேர்ஒவ்வாதே
முன்னைமுதுவோர்மொழி”(திரு.மா. 38)*

*“அறனறிந்தேம்ஆன்றபொருளறிந்தேம்இன்பின்
திறனறிந்தேம்வீடுதெளிந்தேம்–மறனெறிந்த
வாளார்நெடுமாற! வள்ளுவனார்தம்வாயால்
கேளாதனவெல்லாம்கேட்டு”(திரு.மா. 50)*

*இவ்வாறுதிருவள்ளுவமாலைநாற்பொருளையும்வள்ளுவர்பாடியதைப்பற்றிபலபாடல்களில்கூறுகின்றது. புலவர்உலகம்இதைஏற்றுக்கொண்டுஇருந்தது.*

***பரிமேலழகர், நச்சினார்க்கினியர்கூற்று:***

*உரையாசிரியர்பரிமேலழகர் தன்திருக்குறள்உரையின்உரைப்பாயிரத்தில்இவ்வாறுகூறுகிறார்: “....மாந்தர்க்குஉறுதியெனஉயர்ந்தோரான்எடுக்கப்பட்டஉறதிப்பொருள்நான்கு. அவைஅறம், பொருள், இன்பம், வீடுஎன்பன. அவற்றுள்வீடென்பதுசிந்தையும்மொழியும்செல்லாநிலைமைத்துஆகலின்துறவறமாகியகாரணவகையான்கூறப்படுவதல்லதுஇலக்கணவகையான்கூறப்படாமையின்நூல்களால்கூறப்படுவனஏனைமூன்றுமேயாம்”.உரையாசிரியர்நச்சினார்க்கினியர் தன்தொல்காப்பியச்சிறப்புப்பாயிரஉரையில், “...வீடுகூறாரோஎனின்அகத்தியனாரும்தொல்காப்பியனாரும்வீடுபேற்றுக்குநிமித்தம்கூறுதலன்றிவீட்டின்தன்மைஇலக்கணத்தால்கூறார்என்றுஉணர்க. அஃது, “அந்நிலைமருங்கின்அறமுதலாகியமும்முதல்பொருட்கும்உரியஎன்ப” என்பதனான்உணர்க. இக்கருத்தானேவள்ளுவனாரும்முப்பாலாகக்கூறிமெய்யுணர்தலான்வீடுபேற்றுக்குநிமித்தம்கூறினார்” என்றுசொல்கிறார்.*

*அதாவது,வீடுபேறுஎன்பதுமனதால்உணர்ந்துமொழியால்கூறஇயலாதது. எனவேஅகத்தியரும்தொல்காப்பியரும்அறம்,பொருள்.இன்பம்என்றமூன்றையுமேசெய்யுளின்பாடுபொருள்என்றுகூறியுள்ளனர் (தொல். செய். 106). இதனால்துறவறத்தைவிளக்குதல்மூலம்வீடுபேற்றைக்கூறுவதுதவிரநேரடியாகவீடுபேற்றைப்பற்றிக்கூறுதலுக்கு இலக்கணம் இல்லை. எனவேவள்ளுவர்அவ்வாறேதுறவுமூலம்வீடுபேறுபற்றிக்கூறியுள்ளார்என்பதுஅவர்களின்கருத்தாகும்.*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

***வீடுபேறுஅடைதல்:***

*திருக்குறளின்துறவறவியல்வீடுபேறுஅடைதல்பற்றித்தெளிவாகக்கூறுகிறது.துறவுகொள்வதன்நோக்கம் வீடுபேறு அடைவதே. இதைஔவையாரின்தனிப்பாடல்ஒன்றுஅழகாகக்கூறுகிறது.*

*"ஈதல்அறம்தீவினைவிட்டீட்டல்பொருள்எஞ்ஞான்றும்*
*காதல்இருவர்கருத்தொருமித் - தாதரவு*
*பட்டதேஇன்பம்பரனைநினைத்திம்மூன்றும்*
*விட்டதேபேரின்பவீடு"*

*என்பதுஅந்தப்பாடல். உயிர்கள்இறந்தபிறகுமீண்டும்பிறக்கின்றன; இன்ப,துன்பம்தரும்இந்தப்பிறவிச்சுழல்எண்ணற்றமுறைதொடர்கிறது; இந்தச்சுழலில்இருந்துவிடுபட்டுஎக்காலத்தும்துன்பமற்ற, பிறப்பற்றநிலையைஅடைவதேவீடுபேறுஎன்பர். வீடுபேறுஎன்பதேமனிதர்அடையக்கூடியமிகஉயர்ந்தநிலைஎன்பர். இதுவடமொழியில்முக்திஅல்லதுமோட்சம்எனப்படும். அந்தநிலையைஅடையும்வழிஉலகப்பற்றுஅனைத்தையும்துறந்துபரம்பொருளைநினைத்துத்துறவுபூணுவதுஆகும்.*

***வாழ்க்கையின்நான்குவகைநிலை:***

*தருமசாத்திரநூல்கள்வருணாசிரமம்பற்றிக்கூறுகின்றன. வருணம், ஆசிரமம்என்றஇரண்டுசொற்களின்கூட்டேவருணாசிரமம் ஆகும் . நால்வகைவருணம்பற்றி, பொதுவாக, அனைவரும்அறிவர். ஆசிரமம்என்பதுவாழ்க்கையின்நால்வகைநிலைகளைக்குறிப்பது. மாணவநிலை, இல்வாழ்வோன்நிலை, வனம்புகுவோன்நிலை, துறவிநிலைஎன்பவையேஅவை. இளமையில்மாணவனாகக்கல்விகற்கவேண்டும். பின்திருமணம்செய்துஇல்வாழ்க்கைநடத்தவேண்டும். பின்வயதானபிறகுதனியாகவோ, மனைவியுடனோகாட்டுக்குச்சென்றுதவவாழ்க்கைவாழவேண்டும். பின்புஎல்லாவற்றையும்துறந்துதுறவியாகிமுறைப்படிதவஒழுக்கத்துடன்பரம்பொருளைஎப்போதும்நினைத்திருத்தல்வேண்டும். இத்தகையதுறவிஇறந்தபின்மிகஉயர்ந்தநிலையானவீடுபேற்றைப்பெறுவான். இத்தகையவாழ்க்கைமுறையைபழங்காலத்தில்பலரும்கடைப்பிடித்துவந்தார்கள். இந்தநான்குநிலைகளைப்பற்றியும்அந்நிலைகளில்உள்ளோர்கடைப்பிடிக்கவேண்டியஒழுக்கநெறிகளைப்பற்றியும்தருமசாத்திரநூல்களில்கூறப்பட்டுள்ளன.*

***மனுதருமநூல்கூறுபவை:***

*தருமசாத்திரங்களில்மிகவும்பழையதுமனுதருமநூல்.வேதங்களுக்குப்பின்பும்இராமாயணம், மகாபாரதத்துக்குமுன்பும்தோன்றியதுஅது.அதாவதுதிருக்குறளுக்குஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்குமுற்பட்டதுஅதுஎனலாம்.*

*மனுநூல்நான்குஆசிரமங்களையும்பற்றிவிளக்கிக்கூறுகிறது. அதன்அத்தியாயம் 6ன்பின்பகுதியில்சுலோகங்கள் 33முதல் 97 வரைதுறவுவிளக்கிக்கூறப்பட்டுள்ளது. திருக்குறளின் துறவறவியலில்வள்ளுவர் 13 அதிகாரங்களில் துறவுபற்றிவிளக்கியுள்ளார்.மனுநூலில்கூறப்பட்டவற்றையும்திருக்குறளில்கூறப்பட்டவற்றையும்இப்போதுஒப்பிடுவோம்.*

*துறவிஅனைத்துஉயிர்களிடமும்அருளுடன்நடக்கவேண்டும்என்றும்அவற்றுக்குதன்உடலால்எந்தத்தீங்கும்நேராதபடிஅவன்பகலும்இரவும்கவனமாகநிலத்தைப்பார்த்துநடக்கவேண்டும் என்றுமனுநூல்கூறுகிறது (6:39, 6:68).அனைத்துஉயிர்களிடமும்அருளுடன்இருக்கவேண்டும்என்பதைவள்ளுவர்,'அருளுடைமை' அதிகாரத்தில்கூறுகிறார்.*

*"மன்னுயிர்ஓம்பிஅருளாள்வார்க்குஇல்லென்ப*
*தன்னுயிர்அஞ்சும்வினை" (குறள்–244)*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

*என்றுதிருக்குறள்கூறுகிறது. எந்தஉயிருக்கும் சிறுதீங்கும்செய்யாதவன்இறந்தபிறகுஅவனுக்குஎதனாலும்எந்தத்துன்பமும்வராதுஎனமனுநூல் கூறுகிறது (மனு. 6:40).*

*துறவிஎந்தஉயிருக்கும்இன்னாசெய்யக்கூடாது,எந்தஉயிரையும்கொல்லக்கூடாதுஎன்பதை மனுநூல்பலபாடல்களில்கூறுகிறது(6:39, 6:40, 6:46, 6:52, 6:60, 6.66, 6:69, 6:75).வள்ளுவர்,'இன்னாசெய்யாமை'. 'கொல்லாமை'ஆகியஅதிகாரங்களில்இக்கருத்துகளைக்கூறியுள்ளார். இல்வாழ்வான்கூடசிலசமயங்கள்தவிரமற்றபடிபுலால்உண்ணவேண்டாம்என்றுமனுநூல்பலபாடல்களில்கூறியுள்ளது (5:48, 5:49, 5:22, 5:23, 5:27, 5:31, 5:32,5:33, 5:36,5:41). துறவிகள்புலால்உண்ணக்கூடாதுஎன்பதைவள்ளுவர்,'புலால்மறுத்தல்'அதிகாரத்தில்வற்புறுத்துகின்றார்.*

*துறவிபிறர்சொல்லும்கடுஞ்சொல்லைப்பொறுத்துக்கொள்ளவேண்டும்; யாரையும்அவமதிக்கக்கூடாது; யாரையும்பகையாகக்கருதக்கூடாதுஎன்றுமனுநூல்சுலோகம் 6:47 கூறுகிறது. அவன்கோபத்துக்குபதிலாகக்கோபத்தைக்காட்டக்கூடாதுஎன்றும்கோபமாய்ப்பேசுபவனிடமும் நல்லசொற்களைக்கூறவேண்டும்என்றுஅதன்சுலோகம்6:48 கூறுகிறது. சினம்கொள்ளாமையைப்பற்றிவள்ளுவர், 'வெகுளாமை' அதிகாரத்தில்கூறியுள்ளார்.*

*துறவிஉண்மையேபேசவேண்டும்என்றும்மனத்தூய்மையுடன்இருக்கவேண்டும்என்றும் மனுநூல்சுலோகம்6:46கூறுகிறது. வள்ளுவர்,'வாய்மை'அதிகாரத்தில்இதைப்பற்றிவிளக்கியுள்ளார்..*

*தவத்தைப்பற்றிமனுநூல்சுலோகங்கள்6:22,23,24, 25முதலியவைவிவரிக்கின்றன.வள்ளுவர் இதைப்பற்றி, 'தவம்' என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.*

*மனுநூல்சுலோகங்கள் 6:61,62,63,64ஆகியவைஉலகின்நிலையாமையைவிளக்கி,துறவிஉலகவாழ்வின்நிலையாமையைநன்குசிந்தித்துஉணரவேண்டும்என்றுகூறுகிறது. வள்ளுவர்இதைவிளக்கி,'நிலையாமை'என்றஒருஅதிகாரம்எழுதியுள்ளார்.*

*நிலையாமையைஉணர்ந்துஉலகப் பொருட்களைத் துறத்தல் பற்றி, 'துறவு' என்ற அதிகாரத்தில் விளக்குகிறார் வள்ளுவர்,*

*"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை" (குறள் – 345)*

*என்று, உடம்புகூட துறவிக்கு மிகையானது எனக் கூறுகிறார் வள்ளுவர் . மனுநூல்சுலோகங்கள் 6:33, 41, 43, 44, 49ஆகியனதுறத்தலைவிளக்கின்றன.*

*வீடுபேறு பெறுவதற்கு பரம்பொருளைப் பற்றி அறியும் மெய்ஞ்ஞானம் என்ற மெய்யறிவு அடிப்படைத் தேவை ஆகும் என்பதை உபநிடதங்களும் மனுநூல் (மனு. 6.74)முதலியவையும் விளக்குகின்றன.துறவிதியானம்செய்துபரம்பொருளைஉணரவேண்டும்எனமனுநூல்கூறுகிறது (மனு. 6.65, 6.43, 6.49). மெய்யறிவுஅடைந்தவன்பிறவிநோயில்இருந்துவிடுபடுவான்; மெய்யறிவுஅடையாமல்**மயக்கத்தில்**இருப்பவன்பிறவிச்சுழலில்சிக்கிக்கிடப்பான்என்றுஅதுகூறுகிறது (மனு. 6.75).கைவல்ய உபநிடதம் , மெய்ப்பொருளை அறிந்து **மயக்கத்தில்** இருந்து தெளிந்தால் கைவல்யம் என்ற வீடுபேற்றை அடையலாம் என்று கூறுகிறது (கை.உ. 26) . பிரம்மம்எனப்படும்இந்தப்பரம்பொருளைஅறிதலாகியமெய்யறிவைப்பற்றிபல்வேறுஉபநிடதங்கள்விரிவாகவிளக்குகின்றன.வள்ளுவர் இதை 'மெய்யுணர்தல்' என்றஅதிகாரத்தில் விளக்கியுள்ளார்.*

*"கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி" ( குறள் -356)*

*என்பதுஅவர்கூற்று. பரம்பொருள் என்பதை அவர் 'செம்பொருள்' என்கிறார்.*

*"பிறப்பென்னும்பேதமைநீங்கசிறப்பென்னும்*
*செம்பொருள்காண்பதுஅறிவு" (குறள் – 357)*

*என்றுஅவர்கூறுகிறார்.*
*மெய்யறிவுபெற்றுஅறியாமைமயக்கம்நீங்கினால்இருள்தரும்பிறவிச்சுழல்நீங்கிவீடுபேறுஎன்றஇன்பநிலைஏற்படும்என்பதைவள்ளுவர்பின்வரும்குறளில்கூறுகிறார்.*

*" இருள்நீங்கிஇன்பம்பயக்கும்மருள்நீங்கி*
*மாசறுகாட்சியவர்க்கு" (குறள் – 352)*

*மனுநூல்சுலோகம் 6.59, 6.60ஆகியவைபுலன்களைஅடக்குதலையும்***விருப்பு, வெறுப்பு***ஆகியவற்றைஅடியோடுஅழிப்பதன்தேவையையும்கூறுகின்றன.துறவிகளின்புலனடக்கம்பற்றிவள்ளுவர்'நீத்தார்பெருமை'அதிகாரத்திலும்(குறள்-24,25), 'துறவு'அதிகாரத்திலும்(குறள்-343)குறிப்பிட்டுள்ளார்.* **விருப்பு, வெறுப்பை***அழிப்பதுடன்மெய்யறிவால்அறியாமை***மயக்கத்தைப்***போக்கவேண்டும்என்பதைவிளக்கும்வள்ளுவர்,*

*"***காமம்வெகுளிமயக்கம்***இவைமூன்றின்*
*நாமம்கெடக்கெடும்நோய்"(குறள்-360)*

*என்றுகூறிஇவைமூன்றும்அழிந்தால்பிறவிநோய்அழிந்துவீடுபேறுகிட்டும்என்கிறார்.*

*உலகப்பொருட்களைத்துறத்தல்பற்றி 'துறவு' அதிகாரத்தில்கூறும்வள்ளுவர்மனத்தில் உள்ள பற்றை அடியோடு அறுக்க வேண்டும் என்பதை 'அவா அறுத்தல் ' அதிகாரத்தில் கூறுகிறார்.மெய்யுணர்வுபெற்றாலும்அவாவைஅறுக்கவில்லைஎன்றால்அதுமீண்டும்பிறவித்தளையில்தள்ளிவிடும்என்பதால்துறவிஅவாஅறுத்தலில்தவறக்கூடாதுஎன்பதை'அவாஅறுத்தல்'அதிகாரத்தில்வள்ளுவர்வற்புறுத்துகிறார்.தனக்குமிகுந்தமரியாதையுடன் பிச்சையிடுவதையும்துறவிவிரும்பக்கூடாது, அப்படிவிரும்பினால்வீடுபேறுக்குத்தகுதிபெற்றதுறவியையும்அதுமீண்டும்பிறவித்தளையில்கட்டிவிடும்என்பதைமனுநூல்சுலோகம் 6.58 கூறுகிறது.*

*வள்ளுவர்காலத்தில்போலித்துறவிகள்பெருகிவிட்டனர்போலும்! போலித்துறவிகளைப்பற்றிவள்ளுவர்'கூடாஒழுக்கம்' என்றஒருஅதிகாரம்வகுத்துள்ளார் . புறச்சின்னங்கள்முக்கியமல்ல, ஒழுக்கமேமுக்கியம்என்றுமனுநூல்சுலோகம் 6 .66 கூறும்கருத்தைஅந்தஅதிகாரத்தில்வள்ளுவர்,*

*'மழித்தலும்நீட்டலும்வேண்டாஉலகம்*
*பழித்ததுஒழித்துவிடின்'(குறள்-280)*

*என்றகுறளில்கூறுகிறார்.*

***பிறவைதிகநூல்கள் கூறுவன:***

*வேதகாலத்திற்குப்பின்தத்துவஆராய்ச்சிபெருகிஆறுவகைதத்துவங்கள்தோன்றின. இவற்றைஆறுதரிசனங்கள்என்பர். இவைமெய்ப்பொருளைவெவ்வேறுகோணங்களில்ஆராய்கின்றன. அவற்றுள்ஒன்று'யோகதரிசனம்'. பதஞ்சலிமுனிவர்இயற்றிய'யோகசூத்திரம்'என்றநூல்அதைப்பற்றிவிளக்குகிறது. யோகசூத்திரத்தின்'சாதனபாதம்'என்றபகுதிதுறவிகள்கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களையும்வீடுபேறுபெறும்வழிமுறைகளையும்கூறுகிறது. எட்டுஉறுப்புகளைஉடையயோகமுறை (அஷ்டாங்க யோகம் )என்பதைப்பற்றிஅதுவிளக்குகிறது. இதன்முதல்இருஉறுப்புகள்இயமம், நியமம்ஆகியன.இயமம்என்பதுதுறவிகள்நீக்கவேண்டியவை. நியமம்என்பதுதுறவிகள்கடைப்பிடிக்கவேண்டியவை.இயமம்என்பவற்றில்ஒன்றுகள்ளாமை.*

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR 

*வள்ளுவர்இதைப்பற்றி,'கள்ளாமை' அதிகாரத்தில்பாடியுள்ளார். மனுநூலும்தருமத்துக்குரியபத்துதன்மைகளில்ஒன்றாகக்கள்ளாமையைசுலோகம் 6.92 ல்கூறுகிறது. வள்ளுவர் கூறும் மெய்யுணர்தலையும்காமம் . வெகுளி, மயக்கம்ஆகியவற்றைநீக்குதலையும்பற்றியோகசூத்திரம்விவரித்துக்கூறுகிறது.*

*பகவத்கீதைமெய்யறிவைக்கூறும்ஒருஉபநிடதம்போன்றது. மேலேகூறப்பட்டகருத்துகளைபகவத்கீதையும் விவரித்துக்கூறுகிறது . வள்ளுவர் கூறும்காமம் , வெகுளி, மயக்கம்என்பதைபகவத்கீதை காம , குரோத, லோபஎன்றசொற்களால்கூறுகிறது(பக.16:21). இங்குலோபம்(लोभ)என்றசொல்லின்பொருள் அறியாமைமயக்கம்ஆகும்(Sir Monier Williams (1960), p-905) (இங்குபேராசைஎன்றபொருள்இல்லை)*

*இவ்வாறுவைதிகநூல்கள்வீடுபேறுபற்றிக்கூறுபவற்றையேவள்ளுவர்துறவறவியலில் 13அதிகாரங்களில்விளக்கியுள்ளார்.*

**வேதம், திருக்குறள்ஒப்பீடு:**

*திருவள்ளுவமாலையின்பலபாடல்கள்வேதத்தின்பொருளைத்திருக்குறள்கூறுவதாகச்சொல்வதுஇங்குகருதத்தக்கது (தி.மா. 4,15,18,23,24,28,30, 42, 33, 42, 43). இங்குவேதம்என்பதுஉபநிடதம்முதலியவற்றையும்உள்ளடக்கியது. 'இராமாயணமும், பாரதமும், மனுநூலும், பழையவேதங்களும்திருக்குறளுக்குஇணையானவை, மற்றநூல்கள்அதற்குஇணையானவைஅல்ல'என்றுபாடல்30 கூறுவதும்கருதத்தக்கது.*

**முடிவுரை:**

*மேலேகண்டவற்றில்இருந்துதிருக்குறளானதுஅறம், பொருள், இன்பம், வீடுஎன்றநான்கையும்முப்பால்களில்கூறுகிறதுஎன்பதையும்வீடுபேறுபற்றிவைதிகநூல்கள்கூறுபவற்றையேதிருக்குறளும்கூறுகிறதுஎன்பதையும்தெளிவாகஅறியலாம்.*

**துணைநூல்பட்டியல்:**

1. *திருவள்ளுவர்,* **திருக்குறள்**.
2. **திருவள்ளுவமாலை**.
3. *Alladi Mahadeva Sastry (Tr),(1977),* ***The Baghavat Geetha with the commentary of Shri Sankaracharya****, Samata Books, Chennai.*
4. *Buhler, G. (Tr), (1886),* ***The Laws of Manu****, Sacred Books of the East series Vol. 25, London.*
5. *Swamy Chinmayanda, (2018),* ***Kaivalyopanishad****, Chinmaya Prakashan, Central Chinmaya Mission Trust.*
6. *Swamy Vivekananda, (1978),* ***Raja Yoga****, Advaita Ashrama, Culcutta.*
7. *Sir Monier Williams, (1960),* ***A Sanskrit English Dictionary****, Clarendon Press, Oxford.*

***

**கட்டுரைஆசிரியரின்பிறஆக்கங்கள்:**

1. *"தமிழில் பிறமொழிக் கலப்பைக் களைதல்"- மலர்க்கட்டுரை–'அகராதியியல் நாள் மலர்' - செந்தமிழ் சொற்பிறப்பியல் திட்ட இயக்ககம், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை- 8.11.2023*

2. *"திருக்குறள் கதைகள் - அதிகாரம் 92- வரைவின் மகளிர்" -திருக்குறள் கதைகள் 7 அடி உயரப் புத்தகம் (133 எழுத்தாளர்களின் 1330 கதைகள் கொண்டது) - அகழ்கலைஇலக்கியமன்றம், பெரம்பலூர் -19.11.2023.*

3. *"வாழ்வாங்கு வாழ வள்ளுவர் கூறும் அறம் "- கருத்தரங்கக்கட்டுரை -'வாழ்வாங்கு வாழ' கருத்தரங்கம் - பூ.ச.கோ. அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்–30.9.2024*

4. *"அகத்தியச் சூத்திரங்கள் "–கருத்தரங்கக் கட்டுரை -'பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய இலக்கணங்கள்' கருத்தரங்கம் - ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 28.10.2024.*

5. *"கணினி மற்றும் அலைபேசியில் தமிழ் மொழிப் பயன்பாட்டின்வரலாறு"- மலர்க்கட்டுரை - 'அகராதியியல் நாள் மலர் ' - செந்தமிழ் சொற்பிறப்பியல் திட்ட இயக்ககம், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை -08.11.2024.*

6. *“தமிழ் வளர்ச்சியில் கணினியின் பங்கு ” -கருத்தரங்கக்கட்டுரை- ‘தமிழ்மொழி-இணையமும் இளையோர் வாழ்வியலும் ’ கருத்தரங்கம் - அக்ஸிலியம் கல்லூரி, வேலூர் - 06.12.2024.*

7. *“சங்க காலத் தமிழரின் சமயநிலை ” – கருத்தரங்கக்கட்டுரை –‘தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமுதாயமும் ’ கருத்தரங்கம் - ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 11.12.2024.*

8. *“சங்க இலக்கியத்தில் வானியல் ” கருத்தரங்கக்கட்டுரை- ‘காலந்தோறும் தமிழில் அறிவியல்’ கருத்தரங்கம் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -14.12.2014*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR